★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
EELANADU

மலர் 21 ஐப்பசி 28 ஜுல்ஹஜ் 23 இதழ் 275
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14-11-79

RECEIVED 1979-11-14 PERIODICALS DIVISION LIBRARY

இன்று 'பட்ஜட்'

(கொழும்பு)
நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டி மெல், அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத்திட்டத்தை (பட்ஜட்) இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

துண்டுவிழும் தொகையான 1135,78,49,326 ரூபாவை எவ்விதமாகச் சமாளிக்கலாம் என்பது பற்றிய யோசனைகளை நிதி அமைச்சர் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

பட்ஜட் உரைமீதான விவாதம் இம் மாதம் 19ம் திகதி ஆரம்பமாகும்.

நாளை யாழ்.வரும்
25 புதிய பஸ்கள்!

(யாழ்ப்பாணம்)
வடபிராந்தியபோக்குவரத்துச் சேவையில்ஏற்பட்டிருக்கும்புதியதிருப்பமாக. இருபத்தைந்து புதிய பஸ் வண்டிகள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கின்றன. புதிய பஸ் வண்டிகள் தருவிக்கப்படுவது தொடர்பான வைபவம் நாளை மறுதினம் 16ம் திகதி யாழ் மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச் மொகமட், யாழ் மாவட்ட அமைச்சருடனும் வடபகுதி எம் பி க்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து விரைவில் புதிய பஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுமென்று உறுதியளித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்தே, மத்திய போக்குவரத்துச்சபை 25 புதிய பஸ் வண்டிகளை நாளை வியாழக்கிழமையாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கிறது. (ம)

தென்னாபிரிக்க

விடுதலை வீரருக்கு நேரு பரிசு!

(புதுடில்லி)
1979ம் வருடத்துக்கான ஜவஹர்லால்நேரு சமாதானப் பரிசு, தென்னாபிரிக்க விடுதலைத் தலைவர் திரு. நெல்ஸன் ஆர் மொண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச புரிந்துணர்வுக்கான ஜவஹர்லால்நேரு பரிசு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டுவருகிறது. ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பணமும், சான்றிதழும் கொண்ட இப்பரிசு, இவ்வருடம் தென்னாபிரிக்க விடுதலை வீரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு நெல்ஸன் ஆர் மொண்டேலா, இப்பொழுது ஆயுட்காலச் சிறைத்தண்டனை அனுபவித்துவருகின்றார். இவரது பாரியார் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க விடுதலை வீரருக்கு வழங்கப்பட்டிருக்கும் பரிசை, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவரோ அல்லது பிரதிநிதியோ பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திரா-தி.மு.க.

தொகுதி தெரிவு ஒத்திவைப்பு

(சென்னை)
எதிர்வரும் இந்திய லோகசபை இடைத்தேர்தலில்தமிழ் நாட்டில், தி மு க- இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் இரண்டு கட்சிகளுக்குமிடையேதொகுதி ஒற்றுமை ஏற்படுவதிலிருக்கும் வேறுபாடு காணப்படுவதாகத் தெரியவருகிறது.

நேற்று இங்குகூடிய தி மு க ஆட்சிமன்றக்குழு, தொகுதி முடிவுகள்பற்றி ஆராய்ந்தபோதிலும், முடிவுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இது சம்பந்தமாக இந்திரா காங்கிரசுக்கும் தி மு கழகத்தினருக்குமிடையே பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னைமரக் கொலைவழக்கு:

எதிரிகள் மூவரும் விடுதலை!

(யாழ்ப்பாணம்)
மிருசுவில் தென்னை மரக் கொலை வழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

எதிரிகள் மூவரும் நிரபராதிகள் என்று ஜூரிசபையினர் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் ஜாமீல் முன்னிலையில் நான்கு தினங்களாக நடைபெற்று நேற்று மாலை 5 மணிக்கு தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கில் மிருசுவில் குருக்கள் மாவடியில் 1977ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ந் திகதி தென்னைமரத்திலிருந்த நீலன் சின்னத்தம்பியை மரத்தைத் தறித்து வீழ்த்திக்கொலை செய்ததாக வெ கந்தசாமி, வே நடராசா, வே சுப்பிரமணியம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஈ தம்பிரத்தினம், சட்டத்தரணி கே குணரத்தினம், சட்டத்தரணி செல்வி பொன்னையா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி ஜெயக்குமார் ஆஜரானார்.

நேற்று இருபக்க சட்டத்தரணிகளின் தொகுப்புரையைத் தொடர்ந்து நீதிபதி சுமார் மூன்றுமணிநேரம் ஜூரிசபையினருக்கு உரைநிகழ்த்தினார். ஜூரிசபையினர் சுமார் 20 நிமிடங்கள் ஆலோசனை செய்த பின்னர் தமது முடிவைத்தெரிவித்தனர்.

தீர்ப்பை அறிவதற்கு நீதிமன்றத்தில் ஏராளமானோர் திரண்டிருந்தனர். (க)

பனம்பொருள் உற்பத்தியை ஊக்குவிக்க
3 பாரிய தொழிற்சாலைகள்

மாவட்ட அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)
"வடபகுதியில் பனம்பொருள் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு அரசு பாரிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அதன் முன்னோடியாக யாழ்ப்பாணத்தில் மூன்று தொழிற்சாலைகளை அமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது".

அச்சுவேலியில் புதிதாக அமைக்கப்பட்டபனம்பொருள் உற்பத்திப் பயிற்சிநிலையத்தை நேற்றுக்காலை ஆரம்பித்து வைத்த யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு பி விஜயக்கோன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ்அரசாங்க அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமி மங்கள விளக்கேற்றினார்.

பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட செல்வி கணபதிப்பிள்ளை வசந்தகுமாரியின் பெயரை, பதிவேட்டில் தமிழில் பதிந்த யாழ் மாவட்ட அமைச்சர், அப்பெண்ணின் நியமனப்பத்திரத்தையும்வழங்கினார். இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமி ஏனைய பெண்களின் பெயர்களைப் பதிவேட்டில் பதிந்து அவர்களுக்குரிய நியமனப் பத்திரங்களையும் வழங்கினார்:

ஆகிய இளைஞர் சேவை மன்ற இயக்குநர் நாயகமும்

[6ம் பக்கம் பார்க்க]

சந்திரேக்கு—
49 வருடச்சிறை!

(கொழும்பு)
பிரபல குற்றவாளியான அக்கொண சந்திரேக்கு, நேற்று கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிபதி நாற்பத்தொன்பது வருட சிறைத்தண்டனை விதித்தார்.

பிரபல "டேடி" சந்திரே, நேற்றுக் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிபதி முன்னிலையில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆஜர்செய்யப்பட்டபோது மேற்படி தண்டனையை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (ம)

உங்கள் நெற்பயிர்களைப் பாதிக்கும் களைகளை அறவே அழிக்க
இதோ மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்துள்ள

எம். சி. பி. ஏ. 40

[M. C. P. A. 40]

விற்பனைக்கு வந்துவிட்டது.

4 லீற்றர் பிளாஸ்டிக் கலன்களாகவும்
16 அவுன்ஸ் போத்தல்களாகவும்
இப்பொழுது உள்ளன.

மற்றும்: புறடான் 3% குறுணல்கள் (Furadan 3% G R)
பரத்தியன் -50 E. C. (Parathion -50 E. C.)
ரோகுரோ - 40 (Rogrow 40 -) ஆகிய அதிசிறந்த கிருமிநாசினிவகைகளும்
எலோசால் 80% - W. P. (Elosal 80% W. P.)
குப்ரெக்ஸ் C. O. C. (Curpex C. O. C.) ஆகிய பங்கசு கொல்லிகளும்
உங்கள் பயிர்வகைகளைப் பாதுகாக்கும் உத்தரவாதம் மிக்கவை.

விபரங்களுக்கு,

kalkisons

கல்கி சன்ஸ்

தொலைபேசி:7711 147, ஸ்ரான்லிவீதி -யாழ்ப்பாணம். தந்தி: 'ஸ்ரீராம்'

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி 29-ந் திகதி (15-11-79) வியாழக்கிழமை மாலை 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை வரும் சுப முகூர்த்தத்தில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
சண்முகநாதன்
அவர்களுக்கும்
(இந்திரா ஸ்ரோர்ஸ்,
வெலிமடை)

எமது புத்திரி
திருநிறை செல்வி
அருந்ததி
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. சின்னத்தம்பியும்
பாரியாரும்
"லக்ஷ்மி வாசம்"
சித்தன்கேணி,

திருமதி சி. அருணாசலம்,
"அருணோதயம்"
டச்றோட்,
சித்தன்கேணி.

(4086)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

வழங்குநர்கள் பதிவுசெய்தல் 1980

பின்வரும் விடயங்களை வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை மூடிய கடித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 1980 எனக் குறிப்பிடப்பட்டு 29-11-79-ந் திகதியன்றோ அதற்கு முன்னரோ இதன் கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக்கட்டணமும் இணைக்கப்படல் வேண்டும்.

	விடயங்கள்	பதிவுக் கட்டணம்
1	எழுதுகருவி வகை	50/-
2.	அச்சிட்ட பொருட்கள்	50/-
3.	அலுவலக உபகரணங்கள்	
4.	சௌக்கியப் பொருட்கள் (மலகூட, நகரசுத்திக் களஞ்சியப் பொருட்கள், இருப்பு வாளிகள், துப்புத்தடிகள், ஈர்க்குக் கட்டுகள், மலகூட - நகரசுத்தி வண்டிகள், கிருமிநாசினிகள் முதலியன	50/-
5.	பிரசவ விடுதிகளுக்கு மேல்நாட்டு மருந்துகள்	
6.	மரப்பலகைகள்	
7.	பெற்றோல், எண்ணெ, (இன்ஜின் எண்ணெய்) முதலியன	
8.	லொறிக்கான ரயர், ரியூப், பற்றறி முதலியன	
9.	தண்ணீர் மானிகள்	
10.	பி வி ஸி குழாய்கள் — பொருத்திகள்	25/-
11.	ஜி ஐ குழாய்கள் — பொருத்திகள்	25/-
12.	ஹியூம் குழாய்கள் — பட்டடைகள்	
13.	சகல அளவுகளிலுமான எம் எஸ் கம்பிகள் (இரும்பு)	
14.	இரும்புச் சாமான்கள்	50/-
15.	பெயின்ற் — எனமல் / இமல்சன்	25/-
16.	ஆயுர்வேத மருந்துகள்	
17.	வாகனத்தகடுகள்	
18.	சோலவுடைகள்	
19.	பால் உணவுகள்	
20.	பண்ணைக்குரிய அக்ரோ ரசாயனப் பொருட்கள்	
21.	லொறிகளுக்கான உதிரிப்பாகங்கள்	
22.	சேவை இணைப்புகள், கிறீயோசக் கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியவற்றுக்கான மின்சாரப் பொருட்கள்	100/-

2. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்து வழக்கமாகக் கேள்விகள் கோரப்படும் எனினும் அவசியமாகக் காணுமிடத்து வேறு வழங்குநர்களிடமிருந்து விலைக்கோரி கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்துக்குண்டு. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவாணை விடுவிக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்கூற்றுகளுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ் செய்யப்படும்.

க. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12-11-1979.

4088

முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளைபற்றிய கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
சுழிபுரத்தைச் சேர்ந்த முருகர் சின்னர் என்பவரின் மரணசாதன சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல /71

முருகர் சின்னர் மகள் பெண் சின்னப்பிள்ளை சுழிபுரம், தொல்புரம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு மார்கழி மாதம் 29ம் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி
மு. நல்லலிங்கம்
பதிவாளர்

1978ம் ஆண்டு மார்கழி மாதம் 29ந் திகதி தயாரித்தது.

ச. வ. சோமசுந்தரம்
மனுதாரின் பதிவுபெற்ற தரணி

4076

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
காலஞ் சென்ற சவரிமுத்து மரியாம்பிள்ளை என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரியாம்பிள்ளை மகள் பெண் ஃபிரான்சிஸ்கா சென்ற் தோமஸ் வீதி, பருத்தித்துறை

மனுதார்.

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல. 1069/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979 ஆம் ஆண்டு ஆனி மாதம் 8 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
க. விஸ்வலிங்கம்
பதிவாளர்.

21-12-79க்கு நீடித்து வழங்கப்பட்டது.

க விஸ்வலிங்கம்,
பதிவாளர் மா நீ
பருத்தித்துறை

வரைவு!

சி நாகலிங்கமுதலி,
மனுதாரின் சட்டத்தரணி

1979 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

4042

வியாபாரம் ப க
விளம்பரம் சய

முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்
காலஞ் சென்ற துன்னாலை வடக்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகம் மறுநாமம் வடிவேலு என்பவரின் மரண சாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

ஆறுமுகம் விஜயசுந்தரம் துன்னாலை வடக்கு

மனுதார்

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல 1683

மேலேகூறியுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே குறிப்பிட்டவரான காலஞ்சென்றவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979 புரட்டாதி மாதம் 25ந் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

நீதிமன்றக் கட்டளைப்படி
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்

1979 ஐப்பசி 17ந் திகதி என்னால் தயாரிக்கப்பட்டது

மு. ஈஸ்வரபாதம்,
மனுதாரின் சட்டத்தரணி.

4080

பெயர் மாற்றம்

இதுவரை சரவணமுத்து கந்தையா தர்மகுலசிங்கம் என்ற நாமத்தை வழமைப் பாவித்து வந்த நான் இன்று தொடக்கம் சரவணமுத்து கந்தையா தர்மராஜசிங்கன் என்று வழங்கப்படுவேனென்றும் அவ்வாறே கையொப்பமிடுவேனென்றும் அறியத்தருகிறேன்.

ச. க. தர்மராஜசிங்கன்
புத்தூர் மேற்கு

4079

வரி விளம்பரம்

விற்பனைக்கு

[illegible] விற்பனைக்குண்டு தோட்டத்தில் சுமார் 300 மரங்கள்வரை உண்டு. விபரங்களுக்கு மனேஜர் ஏ பவர் கன் கம்பனி லிமிட், 5, [illegible] வீதி, யாழ்ப்பாணம். 4078

1979 டிசம்பர் G C E [O/L] பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். பரீட்சைக்கு ஏற்றமுறையில் கணிதமாதிரி வினாத்தாள் விற்பனையாகிறது. விலை: சதம் 60 மட்டும் விற்பனையாளர்களுக்கு கழிவு உண்டு பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 7631, தந்தி: 'Books'

4069

தேவை

கிராமபோன் கோனுடன் தேவை. தொடர்பு கொள்ளவும் கே. எஸ். நவரட்ணம். 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 4089

படுகொலை

[சுன்னாகம்]

தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த பெரியபுலம் என்ற இடத்தில் ஏழாலையைச் சேர்ந்த கந்தர் தில்லையம்பலம் படுகொலை செய்யப்பட்டார்.

மல்லாகம் நீதிவான் திரு ஆனந்தகுமாரசாமி மரண விசாரணை நடத்தினார்.

யாழ் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பொன்னம்பலம் திருவுடையாள் பிரேத பரிசோதனை நடத்தினார்.

விசாரணையின்பின் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு பொன் சுகுணேந்திரன், தலைமையில் பொலிஸ் கோஷ்டி புலன் விசாரணை

(5-ம் பக்கம் பார்க்க)

திருமந்திர வகுப்பு

அளவெட்டி ஸ்ரீசுப்பிரமுனிய ஆசிரமத்தில் திருமந்திர வகுப்பு 18-8-79 தொடக்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பிற்பகல் 3-00--5 00 மணி வரைக்கும் பண்டிதர் மு. கந்தையா அவர்களால் இலவசமாக நடாத்தப்படும். பங்குபற்ற விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்.

4087

தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அச்சகத் தொழிற்சாலைக்கு கணக்காளர், நூல் போடுபவர்கள், பைன்டர்கள், அப்பியாசக் கொப்பிகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள், ஒப்பந்த முறையில் அப்பியாசக் கொப்பிகள் கட்டித்தருபவர்கள் உடன்தேவை.

இருபாலாரும் தகைமைச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

பீ. பி. டி. தொழிற்சாலை,
மே. பா. பூபாலசிங்கம் புத்தகசாலை;
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

புனர் அமைக்கப்பட்ட
கொன்டா (HONDA)
மோட்டார் சைக்கிள்கள்

C. D. -125. 1975/76 7500/-
C. D. 90 1975/76 5000/-

தொடர்புகொள்ளவும்:

நா. சாம்பசிவம் அன் கோ,
யாழ்ப்பாணம். 4081

தென் கொரியாவில் சர்வாதிகாரி பாக் சுட்டுக்கொலை

சிலன் கதிர்காமர்

(வரலாற்று விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

'உதவி'

மு. திருநாவுக்கரசு

(உதவி விரிவுரையாளர்)

தென் கொரிய ஜனாதிபதி பாக் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை ஓர் அதிர்ச்சி தரும் சம்பவமல்ல உண்மையில் எதிர்பார்க்கப்பட்டதொன்றே. இவரது இருபது வருட எதேச்சாதிகார ஆட்சிக்காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. ஜனநாயக விரோத செயல்கள் அதிகரித்துள்ளன. அடக்குமுறை எதேச்சாதிகாரத் தர்பாரை நடாத்துவதற்குகந்த கருவியாக இவர் கொரியன் சி ஐ ஏ. என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். இத்தாபனம்தான் கே. சி ஐ ஏ. இது இவரது சர்வாதிகாரத்திற்கு உறுதுணையாய் இயங்கி வந்தது. இவர் வளர்த்தெடுத்த கொரியன் சி. ஐ ஏ தாபனத்தின் தலைவனால்தான் இவர் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தென் கொரியாவின் பொதுவரலாறு

இரண்டாம் உலகமகாயுத்தம் முடியும்வரை ஜப்பானின் குடியேற்ற நாடாகக் கொரியா இருந்து வந்தது. யுத்தத்தில் ஜப்பான் தோல்வியடையவே கொரியா அமெரிக்காவினதும், ருஷ்யாவினதும் பாதுகாப்பின்கீழ் விடப்பட்டது. இதன்படி கொரியா வடகொரியா, தென்கொரியா என இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு வடகொரியா ருஷ்யாவின் பாதுகாப்பின் கீழும் தென்கொரியா அமெரிக்காவின் பாதுகாப்பின் கீழும் விடப்பட்டன. வடகொரியாவில் ஜனநாயக மக்கள் குடியரசு என்ற பெயருடன் கம்யூனிஸ்ட் அரசு அமைக்கப்பட்டது. தென்கொரியாவில் சிக்மன் றீ தலைமையில் அமெரிக்க பாதுகாப்புடன் அரசமைக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டில் வடகொரியாவிற்கும் தென்கொரியாவிற்குமிடையில் போரேற்பட்டிருந்தது. இப்போரில் சீன, ருஷ்யா ஆகிய நாடுகள் வடகொரியாவிற்கு ஆதரவளித்தன. அமெரிக்கா தென்கொரியாவுக்கு ஆதரவளித்துப் போரிட்டது. இக்கொரிய யுத்தத்தில் இலட்சக்கணக்கான கொரியர்கள், அமெரிக்கர்கள், சீனர்கள் இறந்துபட்டனர். மீண்டும் 1953ல் 38ம் அகலக்கோட்டில் யுத்தநிறுத்தம் செய்யப்பட்டது.

தென் கொரியாவைப் பொறுத்தவரை 1947-ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டு வரை ஜனாதிபதியாய் இருந்த சிக்மன் றீ என்பவர் ஓர் எதேச்சாதிகாரியாகவே காணப்பட்டார். இவரைத் தொடர்ந்து 1960ம் ஆண்டு முதல் 1979ம் ஆண்டு வரை ஜனாதிபதியாயிருந்த பாக் என்பவரும் ஓர் எதேச்சாதிகாரியாவார். பொதுவாக தென்கொரியாவின் கடந்த 33 வருடகால ஆட்சியும் எதேச்சாதிகாரமானதாகவே இருந்து வந்துள்ளது.

கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டமை, வல்லரசுகளின் தலையீடு, எதேச்சாதிகாரத்தின் வளர்ச்சி, உள்நாட்டில் மக்கள் போராட்டங்கள், பொலிஸ் அடக்குமுறை என்பனவற்றின் பின்னணியில் ஒரு பதட்டம் நிறைந்த அரசாகவே தென்கொரியா கடந்தகாலம் முழுவதும் இருந்து வந்துள்ளது. 1974ல் பாக்கைக் கொலை செய்ய முயன்றபோது அதுகுறிதவறி திருமதி பாக்கைப் பலிகொண்டது. இந்நிலையில் தென்கொரியாவின் அரசியல் வானில் எந்நேரத்திலும் இடிமுழக்கம் வெடிக்கக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. இப் பதட்டமான சூழ்நிலையில் ஒரு சிறுகுழுவின் மத்தியில் ஏற்பட்ட ஆதிக்கப்போட்டி பாக்கின் இருபது வருட எதேச்சாதிகார ஆட்சியைத் துப்பாக்கி வெடியின்மூலம் முடிவிற்குக் கொண்டுவந்தது. எதேச்சாதிகாரி பாக் கொலைசெய்யப்பட்டபோதிலும் தென்கொரியாவில் ஒரு ஜனநாயக ஆட்சி ஏற்படுமென்று சொல்வதற்கில்லை. ஏனெனில் பாக்கைக் கொலை செய்த கே சி ஐ.ஏ. தாபனம் மிகவும் பயங்கரமான தாபனம். இத்தாபனம் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஓர் அடக்குமுறைத் தாபனமாகவே காணப்பட்டது. இத்தாபனத்தின்மூலம் பாக் மிகப் பெரும் அட்டூழியங்களைச் செய்திருக்கின்றார்.

சர்வாதிகாரி பாக்

1960ல் சிக்மன் றீ அரசாங்கத்திற்கெதிராக இருந்த பதட்ட நிலையையும், மாணவ ஆர்ப்பாட்டங்களையும் பயன்படுத்தி ஓர் இராணுவச் சதியின் மூலம் பாக் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார். சகல தந்திரோபாயங்களையும் பயன்படுத்திப் படிப்படியாகத் தன்னை ஓர் சர்வாதிகாரியாக மாற்றிக்கொண்டார். 1963, 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் பாக் தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டதன் மூலமே பதவிக்குவந்தார். இவர் தனக்கேற்றவாறு யாப்பை மாற்றி அமைத்தார். இவரது முதன்மையான நோக்கம் அதிகாரத்தை எப்படியும் தன்கையில் வைத்திருப்பதுதான். 20ம் நூற்றாண்டில் மூன்றாம் உலக நாடுகளில் தோன்றிய எதேச்சாதிகார ஆட்சியாளர்களில் பாக் மிகவும் கொடுமையானவர். இவர் அடக்குமுறைதான் தேசத்தொண்டு என்று கருதியவர். தனது ஆட்சிக்கு எதிரான கருத்துடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அடக்குவதற்காகவே கே சி ஐ ஏ என்னும் தாபனத்தை ஆரம்பித்தார்.

கே. சி. ஐ. ஏ.

கே சி ஐ ஏ ஸ்தாபனத்தில் மூன்று லட்சம் உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர். இது மொத்தச் சனத்தொகையில் ஏறக்குறைய 1 வீதமாகும். இது அரசுக்குள் அரசாக அமைந்துள்ளது. இது வரும் காலத்தில் அமையவிருக்கும் எந்தவொரு அரசுக்கும் அபாயமானதாகவே அமையும்.

இத்தாபனம் ஆட்சிக்கெதிரான கருத்துடைய புத்திஜீவிகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்துச் சிறையிலிட்டுச் சித்திரவதைசெய்தும் வந்தது. பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் ஏராளமாகச் சிறையிலிடப்பட்டனர். இத்தாபனம் அரசியல்வாதிகளைக் கடத்திச்செல்லல், அவர்களைக் கொலைசெய்தல்போன்ற படுமோசமான செயல்களில் எல்லாம் ஈடுபட்டது. 1971ம் ஆண்டு ஜனாதிபதி பாக்கை எதிர்த்துப் போட்டியிட்ட கிம்-டை-யுங் என்பவரை இத்தாபனம் 1973ல் டோக்கியோ நகரிலிருந்து கடத்தி வந்து தென் கொரியாவில் சிறைவைத்தது. அமெரிக்காவில் தஞ்சம்புகுந்திருந்து இத்தாபனத்தின் கொடுமைகளை எழுதி அம்பலப்படுத்த முற்பட்ட முன்னைநாள் கே சி ஐ ஏ தலைவரான கியூங் என்பவரை பாரிஸில் வைத்து இத்தாபனம் கடத்திச் சென்று கொலைசெய்துள்ளதாக நம்பப்படுகிறது.

பொதுவில் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின்படி ஜனநாயக உரிமைக்காகப் போராடிய மத குருக்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் வேறும் புத்திஜீவிகள் என்போர் பெருந்தொகையாகப் பாக்கின் ஆட்சிக்காலத்தில் சிறையிலிடப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டுமுள்ளனர் இவர்கள் செய்த ஒரே பெருங் குற்றம் மனச்சாட்சிக்குச் சரியானவகையில் ஜனநாயகத்திற்காகப் போராடியமைதான் என்று மேலும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாக் கொலை

சிங்மன்றீயின் ஆட்சியை எவ்வாறு மாணவ ஆர்ப்பாட்டங்கள் ஈடாடவைத்ததோ அதேபோலத் தான் பாக்கின் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவந்ததில் மாணவ ஆர்ப்பாட்டங்களுக்கும் பெரும் பங்குண்டு. எதிர்க்கட்சித்தலைவர் மீது பாக் அரசாங்கம் தடைஉத்தரவு விதித்ததும் 1979 ஒக்டோபர் 15ல் மாணவ ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின.

பூசான் பல்கலைக்கழகத்தில் இவ்வார்ப்பாட்டம் ஆரம்பமாகி நாட்டிலுள்ள மற்றைய பல்கலைக்கழகங்களுக்கும் இது பரவியது. மொத்தமாக 5000 மாணவர்கள் தடுப்புக்காவலில் இடப்பட்டனர் மக்கள் மத்தியிலேற்பட்ட அதிருப்திக்கும் இப்பதட்ட நிலைக்கும் ஏற்ற சரியான நடவடிக்கைகளை கே சி ஐ. ஏ. தலைவர் எடுக்கவில்லையெனப் பாக் அவர் மீது குற்றஞ்சாட்டி அவரைப் பதவியிலிருந்து நீக்க எத்தனித்தார். இத்தருணத்திலேதான் 1979 ஒக்டோபர் 25-ம் திகதி ஜனாதிபதி பாக்கை கே-சி-ஐ-ஏ தலைவர் கிம் ஜாரீக கியூ சுட்டுக் கொலை செய்தார்.

ஜனாதிபதி பாக் கொலைசெய்யப்பட்டமை, ஈரானில் ஷா மன்னனின் வீழ்ச்சி என்பன அமெரிக்காவுக்குப் பெரும் தோல்வியையும் ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது தென் கொரியாவில் அமெரிக்கத் துருப்புக்கள் 38,000 பேர்வரை இருக்கின்றனரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது

தென்கிழக்காசியாவிலிருக்கும் ஆட்சியாளர் பலருக்கு பாக்கின் மரணம் பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது ஏனெனில் அவர்களும் பாக் இன்வழியில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்துபவர்களாக மனித உரிமைகளை மீறுபவர்களாகக் காணப்படுகின்றனர். கே-சி-ஐ-ஏ போன்ற அடக்குமுறை இயந்திரங்களை அமைத்து உறுதியான ஓர் ஆட்சியை ஏற்படுத்த முடியாது என்பதற்கு பாக்கின் மரணமும் தென்கொரியாவின் இன்றைய நிலையும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

மக்கள் கருத்து

விபத்தைத் தடுத்திருக்கலாம்

யாழ்-மருதடிவீதியில் உள்ள ஒரு ஒழுங்கை வீட்டிற்கு 150 யார் தூரத்திற்கு தடிக்கம்பத்தின் துணைகொண்டு துண்டு வயர்கள் பொருத்தி மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. சென்ற 4ம் திகதி இரவு கடும்மழை பெய்தமையினாலும் துண்டுவயர்கள் பொருத்தியிருந்தமையினாலும் 11 மணியளவில் வயரிலிருந்து தீப்பற்றி எரிந்தது வயரும் அறுந்து விழுந்துவிட்டது. இதனை அறிந்தநான் அயலவர்களுக்கும் அறிவித்துவிட்டு மின்சார நிலையப் பொறுப்பதிகாரியிடமும் சென்று முறையிட்டேன். ஆனால் பகல் 1 மணிவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அந்த வயரினுள் சிறுவன் ஒருவன் விபத்துக்குள்ளானதாகப் பின்னர் அறிந்தேன். அதிகாரிகள் உடன் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் இந்த விபத்தைத் தடுத்திருக்க முடியும். இப்படியான சம்பவங்கள் நிகழாவண்ணம் பாதுகாக்க யாழ் மாநகராட்சி மன்றம் கவனம் எடுக்கவேண்டும்.

ஜோசப் ஜோர்ச்.

மருதடிவீதி,
யாழ்ப்பாணம்.

கள்ளியங்காடு சந்தை நவீனமாக்கப்படும்?

யாழ். மேயருடன் 'சிவா' பேசுவார்

[யாழ்ப்பாணம்]

கள்ளியங்காடு சந்தைக்கு முன்பாகவுள்ள வாய்க்கால் நீர் பூதவராயர்குளத்தைச் சென்றடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நல்லூர் எம் பி திரு மு. சிவசிதம்பரம் யாழ் பொது மராமத்துப் பகுதிப் பிரதம என்ஜினியர் திரு கணேசரத்தினத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார் மற்றும் பொதுமக்களின் நலனை முன்னிட்டுப் பாலத்தின் மேலாகவுள்ள தகரங்களை அகற்றவேண்டுமென்றும் எம். பி கேட்டுள்ளார்.

இவ்வாய்க்காலில் நீர்தேங்கி நிற்பதால் நுளம்பு உற்பத்தியாவதாயும், இச்சந்தையை நவீனப்படுத்துமாறும் கோரி 'ஈழநாடு' மக்கள் கருத்துப் பகுதியில் கல்வியங்காட்டைச் சேர்ந்த எஸ் ராஜேஸ்வரன் எழுதியிருந்ததைக் கண்ணுற்ற எம் பி மேற்கண்ட நடவடிக்கையை எடுத்துள்ளார்

இச்சந்தை அபிவிருத்திபற்றி யாழ் மாநகர முதல்வருடன் தாம் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் திரு ராஜேஸ்வரனுக்கு எழுதியகடிதத்தில் திரு சிவசிதம்பரம் குறிப்பிட்டுள்ளார். [ஈ]

புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் அபிவிருத்தித் திட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு அரச வைத்தியசாலையில் குழந்தைகள் சிகிச்சை நிலையமும், சுற்றுமதிலும் வெவ்வேறாக இருக்கும் 2 கட்டடப் பகுதிகளையும் இணைக்கும் நடைபாதைகளையும் கட்டுவேலைகள் கட்டடத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி அபிவிருத்திச் சபை 12,500 ரூபா செலவில் ஒரு பகுதி மதிலைக் கட்டியுள்ளது. மிகுதி மதில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் 50,000 ரூபா செலவில் கட்ட ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நிதி ஒதுக்கியுள்ளார்.

குழந்தைச் சிகிச்சைநிலையம் கட்ட 20,000 ரூபாவைச் சுகாதார அமைச்சு ஒதுக்கியுள்ளது

75,000 ரூபா செலவில் பல் சிகிச்சை நிலையம் ஒன்று கட்டப்படவிருப்பதாகவும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

நெடுந்தீவில் 25,000 ரூபா செலவில் பல் சிகிச்சைநிலையம் கட்டப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஈ)

'மாணவர்கள் மூலம் சுகாதாரப்பிரசாரம்செய்யலாம்'

[யாழ்ப்பாணம்]

"கிராம மக்கள் சுகாதாரத்துடன் வாழவேண்டுமானால் ஆசிரியர்கள், பொதுமக்கள், சுகாதாரப் பகுதியினர் ஆகியோர் ஒன்றுபட்டு உழைத்தல்வேண்டும். ஒரு சுகாதாரப் பரிசோதகர் மூன்று கிராமங்களை மேற்பார்வைசெய்து சுகாதார வழிகளை அபிவிருத்தி செய்யமுடியாது. ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்குமிடையில் கூடிய தொடர்பு இருக்கின்ற காரணத்தால் மாணவர்கள் மூலம் சுகாதார வாழ்வு பற்றிய விளக்கத்தை மக்களிடையே பிரசாரம்செய்யலாம்."

யாழ் மாவட்டச் சுகாதாரப் போதனாசிரியர் திரு கா வைத்தீஸ்வரன் இணுவில் அ. மி. த. க. பாடசாலையில் நடைபெற்ற இணைப்புச்சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டம் மானிப்பாய்க் கல்வி-சுகாதார இணைப்புச் சபை ஆதரவுடன் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு செ சோதிப்பெருமாள் தலைமைதாங்கினார்.

இச்சபையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் தலைவர்: திரு செ சோதிப்பெருமாள், செயலாளர்கள்: திரு க மகேந்திரநாயகம், திரு கு செல்வநாயகம், உறுப்பினர்கள்: திருவாளர்கள் சு தட்சணாமூர்த்தி, வே குணரத்தினம், தி சி சண்முகலிங்கம், செ இலகுநாதன், டாக்டர் க பாலசுப்பிரமணியம், க நடராசா, திருமதிகள் ஆ நாகலிங்கம், க பசுபதிப்பிள்ளை.

பாடசாலைச் சுற்றுடல் சுத்தம், நீர் விநியோகம், உணவு விநியோகம், வைத்திய பரிசோதனை, பாடசாலைச் சமூகத் தொடர்பு ஆகியவற்றுக்கான உப குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன. (ச-அ)

பாடசாலைகள் அபிவிருத்தி

[அரியாலை]

"பின்தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதில் யாழ் கல்வித் திணைக்களம் துரிதமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது''

இவ்வாறு யாழ் கல்வித் திணைக்களப் பிரதமக் கல்வி அதிகாரி திரு எஸ் பி சிவபாதம் நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கான புதிய மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு த துரைச்சாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் உப அதிபர் திரு பி கே அன்ரனி நன்றியுரை தெரிவித்தார்.

ஈரானிடமிருந்து எண்ணெ கொள்வனவு நிறுத்தம்

“பொருளாதார வற்புறுத்தலுக்கு அமெரிக்கா அடிபணியமாட்டாது”

ஜனாதிபதி கார்ட்டர் நாட்டு மக்களுக்கு உரை

வாஷிங்டன், நவ 13 ஈரானிலிருந்து எண்ணெ கொள்வனவுசெய்வதை உடன் நிறுத்துமாறு உத்தரவிட்ட அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர், பொருளாதார வற்புறுத்தலுக்கு அமெரிக்கா என்றுமே அடிபணியாது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பணயக் கைதிகள் விவகாரத்தை விடுத்து எழுந்துள்ள அமெரிக்க-ஈரான் நெருக்கடி குறித்து தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈரானிலிருந்து எண்ணெ இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதை விடுத்து அமெரிக்க மக்கள் எண்ணெ பாவனையைக் குறைத்து தியாகஞ்செய்ய வேண்டுமென்றும் எண்ணெயை சேகரித்துவைக்குமாறும் திரு கார்ட்டர் நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

ஈரானில் உள்ள தூதரகத்தில் உள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் அமெரிக்கா மேற்கொண்டுவருகிறது என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாத நிலையை அமெரிக்கா அனுமதிக்கமாட்டாது என்றும் அவர் கூறினார். (இ)

ஜனதாவுக்கும் மக்கள் கட்சிக்கும் வெவ்வேறு வெளிநாடுகள் ஆதரவு

இந்திராகாந்தி தகவல்

கல்கத்தா நவ 13 இந்திய மக்கள் கட்சிக்கு ஒரு வெளிநாடும், ஜனதா கட்சிக்கு இன்னுமொரு வெளிநாடும் ஆதரவளித்துவருகிறது

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் தலைவி திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

கல்கத்தா விமான நிலையத்தில் அவர் நிருபர்கள் மத்தியில் மேலும் பேசுகையில், தனது கட்சியின் நிலை என்றும் இந்திய ஆதரவு நிலையே என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: எதிர்வரும் இடைக்காலத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி அநேகமாக சகல லோக சபைத் தொகுதிகளிலும் போட்டியிடும்.

தி மு க. உட்பட இந்திரா காங்கிரஸின் ஆதரவுக் கட்சிகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஆதரவுக்கட்சிகளுக்கு இந்திராகாங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கும். (இ)

சி. ஐ ஏ யில் இந்திய மாஜி அமைச்சர்?

புதுடில்லி நவ 13 திருமதி இந்திராகாந்தியின் முன்னாள் அமைச்சரவையில் இருந்த அமைச்சர் ஒருவர் அமெரிக்க மத்திய உளவு நிறுவனத்தின் தகவல் பிரிவில் இருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் பற்றி இந்திய [illegible] அரசு இப்போது விசாரணை செய்துவருகிறது. (இ)

இந்திரா காந்தியின் காருக்கு கல்வீச்சு; சரண்சிங்குக்கு கூக்குரல்!

காந்தி மயிரிழையில் தப்பினார்

நால்வருக்குக் காயம்

புதுடில்லி, நவ 13 திருமதி இந்திராகாந்தி பிரயாணம் செய்த கார்மீது கற்கள் வீசப்பட்டதில் திருமதி இந்திராகாந்தி மயிரிழையில் நேற்று உயிர் தப்பினார்! ஆனாலும் காரில் பிரயாணம் செய்த நால்வர் சிறிய காயங்களுக்குள்ளானார்கள்.

பீகார் மாநிலத்தில் திருமதி இந்திராகாந்தி தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளச் சென்றபோதே மேற்கண்ட சம்பவம் நடந்தது!

இதேமாதிரியான ஓர் அனுபவம், காபந்து பிரதமர் திரு சரண்சிங்குக்கும் நேற்று ஏற்பட்டது.

திரு சரண்சிங் நேற்று மத்திய பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளச் சென்றபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் திரு சரண்சிங்கை கேலிசெய்து, அவருக்கு எதிராகக் கூக்குரல் எழுப்பினர்!

‘தபால்நிலையத்தை தரமுயர்த்துக’

(பண்டத்தரிப்பு)

கடந்த 50 ஆண்டுகளாக ஒரே தரத்தில் இயங்கிவரும் இளவாலை உபதபால் நிலையத்தை பூரணத்துவம் வாய்ந்ததொரு தபால் நிலையமாக தரம் உயர்த்தித்தருமாறு தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தொகுதி எம் பியுமான திரு அ. அமிர்தலிங்கத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் இளவாலைப் பகுதி பொதுமக்கள் வேண்டியுள்ளனர்.

இளவாலைக் கிராமப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் அவசிய தேவைகளை இந்த சிறிய உபதபால் நிலையத்தினால் நிறைவேற்றமுடியாதிருப்பதாகவும், இப்பகுதியிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுடைய சம்பளங்களை பெறுவதற்கு அதிக தூரத்திலுள்ள பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு செல்லவேண்டிய அவலநிலைமை ஏற்பட்டு வருவதாகவும் இந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நா

நிர்வாகிகள்

(ஊர்காவற்றுறை)

கரம்பன்தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் பி எஸ் அல்பிரட், பொதுச்செயலாளர் எஸ். குணநாதன். பொருளாளர் பி அஞ்சலோ. துணைத்தலைவர் பொ அரசரட்ணம், துணைச்செயலாளர் பி எஸ் ஜே. எடமன். உறுப்பினர்கள்: வே. திருநாவுக்கரசு, கே சண்முகம், கே நடராசா, எம். அந்தோனிப்பிள்ளை, யோசேப்நாயகம், ஒலிரின் சேவியர். காப்பாளர்கள்: உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் சண்முகதாஸ் நா வே. கனகசபை, நா வே சரவணமுத்து, என் இம்மானுவேல். (க)

பெருமழைக்கு 6 பேர் பலி!

சென்னை நவ 13 தமிழ்நாட்டில் கடந்த 2 நாட்களாகப் பெருமழை பெய்து வருகிறது இதன் காரணமாக திருநெல்வேலியில் 5 பேரும் தஞ்சாவூரில் ஒருவரும் மரணமாகியுள்ளனர் (இ)

யு. எஸ்ஸுக்கு எண்ணெ விற்கத் தடை

ஈரான் அரசு உத்தரவு

தெஹ்ரான், நவ 13 ஈரானிலிருந்து எண்ணெ கொள்வனவு செய்வதை அமெரிக்கா நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ள அதேவேளையில், அமெரிக்காவுக்கு எண்ணெ விற்பனை செய்வதை நிறுத்துமாறு ஈரானிய புரட்சி அரசு எண்ணெக் கம்பனிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஈரானிலிருந்து எண்ணெ கொள்வனவு செய்வதில்லை என அமெரிக்கா முடிவுசெய்வதற்கு முன்னரே அந்நாட்டுக்கு எண்ணெய் விற்பதில்லையென்று ஈரான் தீர்மானித்துவிட்டதாக ஈரானிய எண்ணெ அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் அமெரிக்க எதிர்ப்பை வலுப்படுத்தும் வகையில், ஈரானில் உள்ள தியேட்டர்களில் அமெரிக்க திரைப்படங்கள் காண்பிப்பதும் நிறுத்தப்பட்டுள்ளது (இ)

Melville Assaw Designs

BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

லெபேசிட்

பாவித்து

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிப் புழுக்களை கட்டுப் படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி: 93563 - 96331 - 6

“வங்கிக்கொள்ளையே நஷ்டத்திற்குக் காரணம்”

புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ''எண் பரிசோதனை அறிக்கைப்படி கடந்த ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 9,467-01 சதம் சுத்த இலாபம் பெற்றிருக்கிறது'' என்று சங்கத்தின் தலைவர் திரு வ செல்வராசா கணக்காய்வு அறிக்கையைப் பரிசோதனை செய்த குழுக் கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''எமது சங்கம் 1975-1976 ஆண்டுக் காலத்தில் ரூபா 73,000 சுத்த லாபமடைந்தது. ஆனால் 1976-1977 ஆண்டில் ரூபா ஐம்பதினாயிரமும், 1977-1978 ஆண்டில் ரூபா ஒரு இலட்சத்து முப்பதாயிரமும் சுத்த நட்டமடைந்துள்ளது. இந்நட்டத்திற்கு முக்கிய காரணம் புலோலி வங்கிக் கொள்ளையாகும்.

''எமது சங்கம் ஒரு படமாளிகையைக் கொள்வனவு செய்தது இதனால் ஆரம்ப காலத்தில் சிறிது நஷ்டமேற்பட்டது. இன்று எமது சங்கத்தின் படமாளிகையான 'புலோலி சினிமாஸ்' மின்சாரக் கோளாறினால் தீப்பிடித்துச் சேதமடைந்தது. இதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை நெறியாளர்குழு மேற்கொண்டு வருகின்றது.

''இதுவரை எமது சங்கத்திலிருந்து விவசாயக் கடன்களையும் ஈட்டுக்கடன்களையும்பெற்றுத் திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

ஏனைய சங்கங்களுடன் ஒப்பிடும்பொழுது எமது சங்கத்திலுள்ள சோர்வுப்பணம் மிகவும் குறைவானது. இன்றுவரையுள்ள சோர்வுப்பணம் ரூபா 6 71-56 சதம். இதனை இதுவரை குறிப்பிட்ட ஊழியர்களின் சம்பளத்திலிருந்து பெற்றுவருகின்றோம்.

''இங்கு கொள்வனவு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ஊழியர் ஒருவர் ரூபா 7,752ஐ நம்பிக்கை மோசடி செய்துள்ளார். அவர் பற்றிய விசாரணைகளை பொலிசாரின் நம்பிக்கை மோசடிப்பிரிவிடம் ஒப்படைத்துள்ளோம்.

இன்று நிரந்தர ஊழியர்கள் 73 பேரும் சமயாசமய ஊழியர்கள் 31பேரும் கடமையாற்றுகின்றார்கள். விரைவில் சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை நெறியாளர் குழு எடுக்கவுள்ளது.

''அரிசி குத்தும் ஆலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் அனுமதிகோரவுள்ளோம்'' என்றார். (ச)

கோரபஸ்விபத்து: 78 பேர் பலி!

சென்னை, நவ 13 ஆந்திரப் பிரதேசத்தில், சைதாபுரம் அருகே நேற்று நிகழ்ந்த கோர பஸ் விபத்தில் எழுபத்தெட்டுப்பேர் பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

94 பிரயாணிகளை ஏற்றிச்சென்ற இந்தப் பஸ்ஸில் நான்கு பஸ் ஊழியர்கள் இருந்தனர் என்றும், பதினைந்து பேர் உயிர்தப்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதையைவிட்டு விலகி, பஸ் ஓடையில் பாய்ந்ததினாலேயே இவ்விபத்து ஏற்பட்டது.

NOW SHOWING
REGAL (Jaffna) Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p.m.]
THIS IS LIKE NOROBBERY
YOU'VE EVER IMAGINED
CHARLES GRODIN CANDICE BERGEN
in
11 HARROW HOUSE
(Color)
(More Suitable For Adults)

RANEE CINEMA- Jaffna
Daily 5 Shows at 10-30 a.m 2-15, 4-45, 7-15 & 9-45 p.m
THE EXORCIST
COLOR — DO NOT MISS!
"த எக்ஸோர்சிஸ்ற்"
(அதிபயங்கர சித்திரம்)
(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK.)
(ADULTS ONLY)

6-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி காலை 10-30, பி.ப 2 30, 6-15, 9-45.
சிவாஜிகணேசன் - சுஜாதா
நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

6-வது ஜனத்திரள் வாரம்
மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி சுஜாதா, சந்திரமோகன், கவிதா,
தேங்காய் சீனிவாசன், மனோரமா, சுகுமாரி
நடித்த
முக்தா பிலிம்ஸாரின்
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

ராஜா (யாழ்நகர்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே. ஆர். விஜயா - நாகேஷ்
நடித்த
செல்வம் (புதிய பிரதி)
15-11-79 முதல் எம். ஜி, ஆர்.-ஜெயலலிதா
நடித்த
தாய்க்குத் தலைமகன்

வெலிங்டன் ([illegible])
தினசரி 3 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை முடிப்பவன்
(புதிய பிரதி) கலர்

லிடோ (யாழ் நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
APSARA

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப.2-30 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
என் கடமை
(புதிய பிரதி)

சாந்தி யாழ்நகர். போன்: 7642.
4வது ஜனத்திரள் வாரம்!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
● ஜெய்சங்கர்
● ஸ்ரீ தேவி
● ஸ்ரீ காந்த்
● அசோகன்
● [illegible]
● மனோரமா
● சுருளிராஜன்
டாக்ஸிடிரைவர்
செவிக்கினிய பாடல்கள்! கவர்ச்சி நடனங்கள்! கண்கவரும் காதல் காட்சிகள்!
மற்றும் பயங்கரச் சண்டைகள் நிறைந்த வண்ணத்திரை ஓவியம்

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 28-ம் திகதி

புதன்கிழமை
(14-11-1979)

மேடம்: தந்தைவழிப் பெருமைக்குத் தாராளமாக இடமுண்டு. நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்களின் ஆதரவும் உண்டு.

இடபம்: விருந்தினர்களின் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும். முன்னேற்றமான நாள்.

மிதுனம்: இலகுக்கும் புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும். சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு.

கடகம்: தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். நண்பர்களின் சகவாசத்தால் சிக்கல்களின் மத்தியில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.

சிங்கம். குழப்ப நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். வாழ்க்கையில் சோர்வுக்கிடமுண்டு. சிறிய விஷ பயத்திற்கும் இடமுண்டு.

கன்னி: இனிமையான பேச்சின் மூலம் எல்லோரையும் தன்வசப்படுத்துவீர்கள். குடும்பத்திலும் இன்பம் சூழும். வரவேற்கவேண்டிய தினம்.

துலாம்: தன்பத்தில் ரேகைகள் படரும். தூக்கமின்மையும், மனதில் ஆத்திரம் அலைமோதும். வாகனச் சாரதிகள் நிதானபுத்தியுடன் நடந்துகொள்ளவும்.

விருச்சிகம்: மாதருவழி ஆதரவுக்கு இடமுண்டு. நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். புதிய முயற்சிகள் இன்று கைகூடும்.

தனு: பொதுவாக வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும். வீட்டிலும் புத்திரர் மகிழ்ச்சியடைவர். தொழிலில் வெற்றியுண்டு. சுபதினம்.

மகரம்: முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும். உள்வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம். உசாராக இருக்கவும்.

கும்பம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும். காதல் விவகாரம் தலைதூக்கும். நெருக்குப் பொதுசனத் தன்மைக்கும் இடமுண்டு.

மீனம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத வகையில் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். விபத்துக்கு இடமேற்படும். அவதானம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார் - ஜெயசுதா
பந்தாட்டம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார் - ஜெயசித்ரா
வெள்ளிக்கிழமை
விரதம்

சுன்னாகம் றேயல் வி. க.

கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(சுன்னாகம்)

சுன்னாகம் றேயல் விளையாட்டுக் கழகம் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமாகியுள்ளது.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடைபெற்றுவரும் இச்சுற்றுப்போட்டியை சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு பொன் சுகுணேந்திரன் ஆரம்பித்துவைத்தார்.

இன்று புதன்கிழமை நடைபெறும் போட்டியில் ரூப்பிளாஸ் விக்னேஸ்வரா வி. க. வை எதிர்த்து, உடுவில் லயன்ஸ் ஸ்ரார் வி. க 'ஏ' மோதுகின்றது.

16ம் திகதி இணுவில் இளந்தளிர் வி. க. வை எதிர்த்து இணுவில் சுமா வி. க. வும் 18ம் திகதி நந்தா வி. க. வை எதிர்த்து மல்லாகம் ஸ்ரீ முருகன் வி. க. வும், சுன்னாகம் சாந்தி ஸ்ரார் வி. க. வை எதிர்த்து ரூப்பிளாஸ் விக்னேஸ்வரா வி. க. வும், 19ம் திகதி தெல்லிப்பழை வினஸ் வி. க. வை எதிர்த்து சுன்னாகம் சாந்தி ஸ்ரார் வி. க. 'பீ' யும் மோதுகின்றன

முடிவில் அரை இறுதிப்போட்டி, இறுதிப் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன. [ஈ]

"விழாக்களுடன் நின்றுவிடாது

சிறுவர்களது பிரச்னையிலும் கவனம்செலுத்தவேண்டும்"

மேலதிக அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"சிறுவர்களின் நலனைப் பேணுவதற்கு விழாக்கள் எடுத்தல் மட்டும் போதாது அவர்களின் உணவுப்பிரச்னை கல்விப்பிரச்னை பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றிலும் சகலரினதும் கவனம் செலுத்தப்படவேண்டும்."

மேற்கண்டவாறு யாழ் சம்பத்திரிசியார் கல்லூரிப்பழைய மாணவர் சங்கத்தினர் சர்வதேசசிறுவர் ஆண்டையொட்டி நடத்திய சிறுவர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினருமான திரு என் பி ஜெகநாதன் கூறினார்.

சமக்கோரியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கத்தினரால் ஏற்கனவே யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு கிண்ணங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன

இவ்விழாவில் கைதடி நபீல்ட் பாடசாலையைச் சேர்ந்த கட்புலன் செவிப்புலனற்ற மாணவ மாணவிகளும் இரட்சணிய சேனைச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களும் கலந்து கொண்டனர். இவர்களுக்கு சங்கத்தினர் சிற்றுண்டி விருந்தளித்து மகிழ்வித்ததுடன் பரிசில்களும் வழங்கினர் வலது குறைந்த மாணவர்கள் அளித்த கலை நிகழ்ச்சிகள் விழாவில் சிறப்பான இடத்தைப் பெற்றன இவ்விழாவின் அமைப்பு ஒழுங்குகள் யாவற்றிற்கும் சங்கத்தின் சமூகத்தொடர்புச் செயலாளர் திரு ஜெ இம்மனுவேல் திருச்செல்வம் பொறுப்பாக இருந்தார் (அ)

தொ. நு. பிரிவு இந்துக்கல்லூரியில் அமையும்

(பண்டத்தரிப்பு)

தேர்தல் தொகுதிகள் தோறும் கல்லூரிகளில் தொழில் நுட்பபிரிவு ஆரம்பிக்கும் கல்வித் திணைக்களத்தின் புதிய திட்டப்பிரகாரம் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான தொழில் நுட்பப் பிரிவு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நிறுவப்படவுள்ளது யாழ் மாவட்ட தொழில் நுட்ப கல்வி அதிகாரி திரு இ வி இராமநாதன் இக்கல்லூரியை பரிசு செய்ததை அடுத்து வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி திரு தா திருநாவுக்கரசு இக்கல்லூரியில் புதிய தொழில் நுட்ப பிரிவை நிறுவுவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் 90 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார் இந்நிதியில் 70 ஆயிரம் ரூபா தொழில்நுட்ப பிரிவுக் கட்டிடத்திற்கும் 20 ஆயிரம் ரூபா தொழில்நுட்ப பயிற்சிக்கான உபகரணங்களை வாங்குவதற்கும் பயன்படுத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது. [நா]

குருக்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் பிரதம குருக்களாக சு கைலாசநாதக்குருக்கள் (பாப்பா ஐயர்) நியமிக்கப்பட்டுள்ளார் இவர் முன்னர் வண்ணை சிவன்கோவிலில் பணியாற்றியவராவர். [அ]

படுகொலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி

செய்து வருகிறது.

இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைதாகவில்லை.

இக்கொலை சம்பந்தமாக தகவல் தருமாறு இன்ஸ்பெக்டர் சுகுணேந்திரன் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

RIO Jaffna Phone: 7607
Daily 4 Shows Grand Release
LONG AWAITED PICTURE
SWEENEY 2
மீண்டும் அதி உக்கிரத்துடன்
வருகிறார்கள் [illegible]
[Adults Only]

தென்னைமரக் கொலை வழக்கு:

‘எதிரிகளை தேடிப்பார்த்தேன் எவரையும் காணவில்லை’

சப்-இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

நீலன் ராசா பொலிசுக்கு அளித்த வாக்குமூலத்தில் 3ம் எதிரியின் பெயரைக் கூறவில்லை என நேற்று முன்தினம் சாட்சியமளித்த சப்-இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் குகதாசன் கூறினார்

சப்-இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் குகதாசன் மேலும் கூறியதாவது: சம்பவம் நடந்த போது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன். இச்சம்பவம் பற்றி முதல் முறைப்பாடு கொடுத்தவர் இ கிட்டினர்.

13-12-77ல் இரவு 7-50 மணிக்கு நீலன் கிட்டினர் பொலிஸ் வாக்குமூலத்தில் கூறியதாவது: இன்று 4-30 மணியளவில் நான் கோப்ப தேசனுக்கு கள் கொண்டு சென்ற சமயத்தில் ஞானியார் குளத்தை அடைந்தபோது ஐயோ ஐயோ என்று சத்தம் கேட்டது. நான் ஓடிச்சென்றேன். வேலாயுதம் கந்தசாமியும், குமாரசாமி நடராசாவும் கோடரியால் மரத்தைத் தறித்துக் கொண்டிருந்தார்கள் சுப்பிரமணியம் தென்னைமரத்துப் பக்கத்தில் வண்டாக்கத்தி வைத்திருந்தார். 60 யார் தூரத்தில் நின்றேன் என் மூத்த அண்ணன் நீலன் சின்னத்தம்பி மரத்தில் கள் சீவிக் கொண்டிருந்தார். குளறிக் கொண்டிருந்தார். நான் மரத்தை நோக்கி ஓட 4 கத்தியுடன் நின்ற சுப்பிரமணியம் என்னைத் துரத்தினார். நான் நீலன் ராசா வீட்டிற்கு ஓடிச் சென்று கண்டதைச் சொன்னேன். ஓடிச்செல்லும்போது மரம் விழுந்துவிட்டது நீலன் ராசா சம்பவம் நடந்த இடத்திற்கு ஓடினார். நான் இறந்தவர் வீட்டிற்கு சென்றேன். அங்கு அண்ணன் மனைவி இலக்கொழுந்தை சந்தித்து அவருக்கு அறிவித்தேன். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு போனபோது நீலன் ராசா வண்டில் வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டேன் நீலன் சின்னத்தம்பி உயிருடன் இருந்தார். அனுங்கிக்கொண்டிருந்தார் அவரைக் கதைக்கமுடியவில்லை வண்டிலில் அவரை ஏற்றினர வழியில் இறந்துவிட்டார் இதற்கு காரணம் என்னவென்று தெரியாது அவர்கள் எங்களுடன் கோபமில்லை பொலிசுக்கு அறிவிக்க தம்பி ராசாவுடன் வந்தேன் நீலன் சின்னத்தம்பியுடன் அவர்கள் கோபமோ என்று எனக்கு தெரியாது. இப்படி வாக்கு மூலத்தில் கூறியிருந்தார். பின் நீலன் ராசாவின் வாக்கு மூலத்தையும் பதிந்தேன்

சம்பவம் நடந்த இடத்திற்கு நான் போகவில்லை சப்இன்ஸ்பெக்டர் சரத் இலவாதன் போனார்.

எதிரிகளின் சட்டத்தரணி ஆர் ஈ தம்பிரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: நீலன் பொலிஸ் வாக்குமூலத்தில் 3ம் எதிரியின் பெயரைக் கூறவில்லை? -கூறவில்லை

சப்- இன்ஸ்பெக்டர் சரத் இலவாதன் கூறியதாவது:-

சம்பவம் நடந்தபோது சாவகச்சேரி பொலிஸில் கடமையாற்றினேன், அன்று மாலை 3-15 மணியளவில் கொலை சம்பந்தமாக விசாரணைக்குப் புறப்பட்டேன், வேறு பொலிசாரும் வந்தனர். 8-40 மணிக்கு குருக்கள்மரவடிக்குச் சென்றோம். 30 பேர் வரை இருந்தார்கள். பனங்கட்டி செய்யும் தொழிற்சாலை இருந்தது. அதற்கு முன்பாக வண்டில் நின்றது. வண்டிலுக்குள் இறந்தவரின் உடலைத்தவிர ஒரு பெண் இருந்தார் விசாரணையின்போது அவர் இறந்தவரின் மனைவி என அறிந்தேன்.

மரத்தின் உயரம் 40 அடி

பனங்கட்டித் தொழிற்சாலையிலிருந்து சற்றுத்தூரத்தில் சம்பவம் நடந்த இடம் இருந்தது. வண்டில் பாதை கடந்த இருந்தது. அங்கு தென்னை மரமொன்று தறித்து வீழ்த்தப்பட்டிருந்தது. பொலிஸிற்கு தகவல்தந்த கிட்டினர் அங்கு நின்றார். கிட்டினர் இறந்தவரின் உடலைக் காட்டி அவர்தான் தன் அண்ணன் என்றார். பின் மரத்தைக் காட்டினார். தென்னைமரம் சதாசிவம் வளவில் நின்றது. வளவைச்சுற்றி கம்பி அடிக்கப்பட்டிருந்தது. மரம் விழுந்ததால் கம்பி அறுந்திருந்தது. குரும்பைகள் சிதறிக்கிடந்தன கள்ளு முட்டிபொன்றும் நிலத்தில் விழுந்து உடைந்திருந்தது. தென்னோலைகளில் இரத்தக் கறை காணப்பட்டது. தென்னைமரத்தின் நீளம் 40 அடி 7 அங்குலம், தறிக்கப்பட்ட அடிமரம் 3 அடி 5 அங்குலம், மரத்தின் சுற்றளவு 3 அடி 3 அங்குலம், வேலுப்பிள்ளை என்பவரின் வளவில் விழுந்திருந்தது, அங்கு துவாய் ஒன்றும் இருந்தது, இந்தத் துவாய் ஒழுங்கையில் கிடந்தது. வெட்டப்பட்ட பாளையும் இருந்தது.

தறித்த மரத்திற்குச் சுற்றிவர தென்னைமரங்கள் நின்றன இல மரங்கள் உயரமாக நின்றது. சிறிய மரங்களும் நின்றது. கிட்டினர் தான் எங்கே நின்று பார்த்தேன் என்று காட்டினார். அந்த இடத்தில் நின்று பார்த்தால் தறித்த மரத்தைப் பார்க்கமுடியும். அது 30 யார் தூரமிருக்கும், அவ்விடத்தில் இரண்டு வீடுகள் இருந்தது. ஒன்று சுப்பிரமணியம் அன்னமுத்துவின் வீடு, மற்றது சின்னர் வேலுப்பிள்ளையின் வீடு.

எதிரிகளைத் தேடினேன்

பின் எதிரிகளைத் தேடிச் சென்றேன், அன்றைய தினம் எதிரிகளைக் கைதுசெய்வதில் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. அடுத்தநாளும் அந்த இடத்திற்குச் சென்றோம். உதவிப் பொலிஸ் அதிபர் சந்திர ஜெயவர்த்தனவும் வந்தார். இறந்தவரின் மனைவியின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தேன். அதன்பின் இராசரத்தினத்தின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன், மீண்டும் எதிரிகளைத் தேடிப்பார்த்தேன் 14ம் தேதி 2ம் எதிரியான நடராசா வீட்டிற்குச் சென்றேன் அவருடைய வீடு பூட்டியிருந்தது. யாரும் இருப்பதாகத் தெரியவில்லை, 3ம் எதிரி சுப்பிரமணியம் வீட்டிற்குச் சென்றேன், அந்தவீடும் பூட்டப்பட்டிருந்தது, 1ம் எதிரி கந்தசாமி வீட்டிற்கு 13ம் தேதி இரவு சென்றேன், அவரது வீடு சம்பவம் நடந்த இடத்திலிருந்து 30 யார் தூரத்தில் உள்ளது, நான் சென்ற போது 1ம் எதிரியின் வீட்டு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. 1ம் எதிரியைத் தேடிப் பார்த்தேன் அவரைக் காணவில்லை.

‘சிறுபான்மைத் தமிழ்மக்கள்

உரிமைகளைப்பெறுவதற்கு ஒன்றிணையவேண்டும்’’

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழர்களின் குடியிருப்பு வசதி, கல்வி, பொருளாதாரம், போன்ற பல உரிமைகளில் இன்னமும் பூரண நிறைவுபெறவில்லை. சாதிப்பிரச்சினைகளிலும் இன்னமும் சரியான சமத்துவநிலை அடையவில்லை இப்படியான நிலையில் நமது சமூகத்து மக்கள் பல பகுதிகளாகப் பிரிந்து, தனிப்பட்ட இலாபம் கருதிச் செல்வதால் சமூகமுன்னேற்றங்களில் எங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக உள்ளோம். இந்நிலையில்தான் இன்று நமது மக்களை ஒன்றிணைத்து ஒரேஅணியில் நின்று நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் ‘‘அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றக்கழகம்’’ என்ற இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளோம். எனவே இந்த இயக்கத்தைப் பலப்படுத்தி எமது சமூகத்தின் பல பிரச்சினைகளை இந்த இயக்கத்தின் மூலமாக எடுத்துக்கூறிப் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒன்றிணைந்து நிற்கவேண்டும்’’

இவ்வாறு உடுவிலில் நடந்த அ. இ. சி. பா. தமிழர் முன்னேற்றக்கழக அங்குரார்ப்பணக்கூட்டத்தில் அதன் செயலாளர் ஆசிரியர் திரு. ஏ. ஜி. பெர்னண்டோ கூறினார். மற்றும் திரு ஹென்றி ஆசீர்வாதம் ஜே. பி., ஆசிரியர் இ கந்தசாமி, ஓய்வுபெற்ற தலைமைஆசிரியர் திரு ஜே ஆர் அம்பேம், ஆசிரியர் திரு. எம். மாணிக்கம், இ சின்னத்தம்பி ஜே. பி, முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு சின்னத்தம்பி ஆகியோரும் இக்கூட்டத்தில் பேசினார்கள்:

கூட்டத்திற்கு ஓய்வுபெற்ற ஆசிரியரும், சமாதான நீதிவானுமாகிய திரு. ஆ கணபதிநாதன் தலைமை வகித்தார். (க)

ஆசிரியர் இடமாற்றம்

அபிவிருத்திச்சபை கடும் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் திரு பூ தனபாலசிங்கம் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டது குறித்து கல்லூரி அதிபர் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளதுடன், கல்லூரி அபிவிருத்திச் சபையும் ஆட்சேபனை கிளப்பியுள்ளது.

கல்விச்சேவை கமிஷனுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள ஆட்சேபனைக் கடிதத்தில், மேற்குறிப்பிட்ட ஆசிரியர் இடமாற்றம் குறித்து தாங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறும் கோரியுள்ளனர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கத்திற்கும், வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு தா திருநாவுக்கரசுவுக்கும் இந்த இடமாற்றத்தை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

பனம்பொருள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பதில் தலைவருமான திரு என் கனகசூரியர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் யாழ் மாவட்ட அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

‘‘பனம்பொருள் உற்பத்தியை வடபகுதியில் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் சாவகச்சேரியில் பனம்பொருள் உற்பத்தித்தலைமைக் காரியாலயமும், உடுப்பிட்டியில் சாராய வடிசாலையொன்றும், காங்கேசன் துறையில் பனந்தும்புத் தொழிற்சாலை ஒன்றையும், பருத்தித்துறையில் ரசாயனத் தொழிற்சாலை ஒன்றையும் ஆரம்பித்து வடபகுதிமக்களின் பொருளாதாரத்தை வளம்படுத்த முன்வந்துள்ளது. வடபகுதியிலுள்ள சகலதொகுதி மக்களுக்குமாக இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

‘‘வடபகுதியிலுள்ள மக்களுக்காக கடந்த வருடம் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது, திரு கனகசூரியர் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் தான் அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

‘‘பத்துப்பனை மரங்களை வைத்திருப்பவர்கள் அவற்றின் பலன்களை முறையாக அனுபவிப்பார்களேயானால் மாதம் ஒன்றுக்கு 500ரூபாவை மிகவும் சுலபமாகச் சம்பாதிக்க முடியும். அதனால்தான் அரசாங்கம் இப்பணிக்கு கூடுதலான முக்கியத்துவத்தைக் கொடுப்பதோடு, அதிகமான உதவியையும் வழங்க முன்வந்துள்ளது.

‘கோப்பாய்த் தொகுதியில் தான் கூடுதலான பனைமரங்கள் இருக்கின்றன. இங்குள்ள மக்கள் கூடுதலாக இத்தொழிலையே நம்பி வாழ்கிறார்கள். அதனால்தான் கோப்பாய்த் தொகுதியிலுள்ள அச்சுவேலியில் மேற்படி பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துள்ளோம். இத்தொகுதி மக்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்று வடபகுதியின் முன்னேற்றத்திற்கு உதவவேண்டும்’’ என்றார்.

யாழ் மாவட்ட சிறு கைத்தொழிற் பிரதிப் பணிப்பாளர் திரு சிவலிங்கம் பேசுகையில் [illegible] செய்யப்பட்ட விசிறிகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று முன்னர் கைச்சாத்திடப்பட்டதாகவும் விசிறிகளைச் செய்து தர இங்குள்ள மக்கள் முன்வராததால் மேற்படி ஒப்பந்தம் ரத்துச்செய்யப்பட்டதாகவும் கவலை தெரிவித்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு என் ஜி ஜெகநாதனும் பேசினார். (ஜெ)

மின்சாரத்துக்கு சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதடி வீதியைச் சேர்ந்த மார்க்கஸ் சோமகிறி அல்லது வசந்த என்ற 13 வயது வேலைக்காரச்சிறுவன் நிலத்தில் அறுந்து விழுந்து கிடந்த மின்சாரக் கம்பியில் சிக்கி பரிதாபமாக மரணமானான்.

இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரியும் பதில் நீதவானுமான திரு எஸ் எல் பிரான்சிஸ் விசாரணை நடத்தினார்.

அலோசியஸ் என்பவரின் வீட்டுவேலைக்காரனான மதுரங்குளி வாசியான சோமகிறி இருந்துவந்ததாகவும், பக்கத்து ஒழுங்கையில் புதிதாகக்கட்டிய வீட்டில் குடிபுகுதல் வைபவத்துக்கு மாநகரசபை மன்றம் தற்காலிகமாக மின்சார இணைப்புக் கொடுத்திருந்ததாகவும், சம்பவதினத்தன்று ‘ஐயோ’ என்ற சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிப்போன சமயம் சோமகிறி அறுந்து தொங்கிய மின்சாரக் கம்பியில் சிக்குண்டிருந்தார் எனவும் ஆஸ்பத்திரியில் மரணம் சம்பவித்ததாகவும் சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது

மேல்விசாரணையை ஒத்திவைத்த மரணவிசாரணை அதிகாரி மின்கம்பி எப்படி அறுந்தது என்பதுபற்றி அறிவதற்காக மின்சாரப்பகுதி உத்தியோகத்தரை தம் முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

அமைப்பாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் திரு பி ஈ றெஜி சண்முகராஜா, கோப்பாய் தெற்குப் பகுதியின் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நினைவு அஞ்சலி

வானுலகைச் சென்றடைந்த அன்னம்மா!

உங்களுடைய திடீர் மறைவின் பின், ஓராண்டு நினைவு ஆருத்துயரமாகி, சொற்களை விழுங்கி விட்டுக் கண்ணீர்த் துளிகளாலேயே வெளிக்காட்டவேண்டிய நிலைக்கு எம்மை ஆக்கிவிட்டது! உங்களது இனிய நினைவுகள் எமது இருதயத்தைவிட்டு எப்பொழுதும் அகலாது. உங்களது நினைவால் கவலையுறும் கணவன், மக்கள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள் ஆகியோர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

என் தாமோதரம் பிள்ளை,
ஈப்போ வீதி,
கோலாலம்பூர்.
4094

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. GP/89/8/78 The Eelanadu P B No. 49 Telegram Eelanadu
Phone: 389.